
SRI MURUGAN HINDU ASSOCIATION
Regd No: HA/4/BT/186
ARAYAMPATHI

இலவச வெளியீடு - 01



# ஸ்கந்த சஷ்டி விரதம்

# ஸ்கந்த சஷ்டி கவசம்

## விரத அடியார்களுக்கான கையேடு

அனுசரணை :- ஸ்கந்த சஷ்டி உற்சவ திருப்பணிச் சபை
ஆறு காட்டி குடி மக்கள்
ஸ்ரீ கந்தசுவாமி ஆலயம்
ஆரையம்பதி

வெளியீடு:
ஸ்ரீ முருகன் இந்து மன்றம்
ஆரையம்பதி
பதிவு இல:HA/4/BT/186

குகநேயச் செல்வர்களே !

நாம் வாழ்ந்து கொண்டிருக்கும் யுகம் கலியுகம். இந்த கலியுகத்திற்குரிய இறைவன் கலியுக வரதனாம் ஸ்ரீ முருகப்பெருமான். நாம் வாழ்க்கையில் அனுபவித்துக் கொண்டிருக்கும் துன்பங்களில் இருந்து விடுபட்டு நிலையான பேரின்பத்தை அடைவதற்காக இறைவனை நோக்கி விரதமிருந்து வழிபட்டு நமது முன்ஜென்ம பாவங்களில் இருந்து விடுபடுகின்றோம். இந்த பிறவியிலேயே நாம் செய்யும் நன்மைகள், ஆலயத் தொண்டுகள், இறைவனை நினைத்து நாம் அனுஷ்டிக்கும் விரதங்கள் என்பவையே மறு ஜென்மத்திலும் நம்மை தொடர்ந்து புண்ணியம் செய்ய வைக்கும், நல்ல பிறப்பை நமக்கு தரும்.

அந்த அடிப்படையில் எம்பெருமான் முருகப்பெருமான் நமது சொந்தப்பெருமான் பல நூற்றாண்டுகளாக நம் ஊர் மத்தியிலேயே மூலமூர்த்தியாக வீற்றிருக்கும் வேலவப்பெருமான் அவரை பல பல வழிகளில் வழிபட்டு முக்தியடையலாம். அந்த வகையில் விரதமிருந்து எம்பெருமானை வழிபட்டு வேண்டியதை வேண்டியாங்கு பெற முக்கிய விரதமாக கொள்ளப்படுவது எம்பெருமானின் விரதங்களில் ஒன்றான ஸ்கந்த சஷ்டி விரதம். விரதத்தை அனுஷ்டிக்கும் அடியார்கள் விரத பலனை முழுமையாக பெற வேண்டுமானால் விரதத்தைப் பற்றி ஓரளவேனும் அறிந்திருத்தல் அவசியமாகின்றது. அதேபோன்று விரத நாட்களில் மனம் போற வழி போகாது எம்பெருமானின் சிந்தனையிலேயே இருக்கும் பொருட்டு விரத நாளில் காலை, மாலை வேளை என்றில்லாமல் சதா நேரமும் ஸ்கந்த சஷ்டி கவசம், குமாரஸ்தவம் கந்தர் கலிவெண்பா, திருப்புகழ் போன்ற கந்தப்பெருமானின் அருட்பாக்களைப் பாடி எம்பெருமானின் சிந்தனையிலே திளைத்திருக்க வேண்டும்.

எனவே அடியார்களின் நன்மை வேண்டி எம்பெருமானின் திருநாமத்தைத் தாங்கிய நமது ஸ்ரீ முருகன் இந்துமன்றம் இந்த ஏவிளம்பி வருஷ ஐப்பசித் திங்களிலே ஸ்கந்த சஷ்டி விரதம் அனுஷ்டிக்கும் அடியார்கட்கு, அடியார்கட்கும் நாங்கள் அடியவர்கள் என்னும் அடிப்படையில் ஸ்கந்த சஷ்டி விரதம், அதன் விபரம், ஸ்கந்த சஷ்டி கவசம், குமாரஸ்தவம் எனும் எம்பெருமானின் அருட்பாடல்கள் கொண்ட இந்த சிறிய பதிப்பை அடியார்கட்கு வழங்குவதில் மனமகிழ்வு கொள்கிறோம். இந்த சிறிய பதிப்பை நீங்கள் பயன்படுத்தி நல்ல முறையிலே நல்வாழ்வு வாழ வேண்டி எல்லாம் வல்ல ஸ்ரீ முருகப்பெருமானை இறைஞ்சுகின்றோம்.

## “ வேலுண்டு வினையில்லை ”

# ஸ்கந்த சஷ்டிவிரதம்

கலியுகவரதனும், தமிழ்க்கடவுளுமாகிய கந்தக் கடவுளாம் சுப்பிரமண்ய சுவாமிக்குரிய விரதங்களில் மிகச்சிறந்தது தலையாயது ஸ்கந்த சஷ்டி விரதம். சைவமக்கள் முக்கியமாக கந்தபுராணக் கலாச்சாரத்தில் திளைத்திருக்கும் நம் மக்கள் , முருகப்பெருமானை குல தெய்வமாக வழிபடும் மக்கள் இவ் விரதத்தை மிகப் புனிதமாகவும் , பக்தி பூர்வமாகவும் கைக்கொள்கின்றனர்.ஐப்பசி மாதத்து தீபாவளி அமாவாசையை அடுத்து வளர்பிறைப் பிரதமை முதல் (சுக்கில பட்ச பிரதமை) சஷ்டி ஈறாக உள்ள ஆறு நாட்கள் ஸ்கந்த சஷ்டி விரத காலமாகும். சகல செல்வங்களையும் , சுகபோகங்களையும் தரவல்ல இந்த விரதம் புத்திர பாக்கியத்துக்குரிய மிகவும் அரிதான சிறப்பான விரதமாகும்.

“ சட்டியில் இருந்தால்தானே அகப்பையில் வரும் ” என்பது ஓர் பழமொழி. இதற்கு வெளிப்படையான சொற்பொருள் ஸ்கந்த சஷ்டியில் விரதமிருந்தால் அகப்பையாகிய கருப்பையிலே கரு உண்டாகும் என்ற உட்கருத்தும் உண்டு. பகல் 12 நாழிகைக்கு குறையாமல் பஞ்சமித்திதியும் அதன்பின் சஷ்டி வியாபகமும் இருக்கும் நாள் சூரசங்காரத்திற்குரியது. பிரதமைத் திதியில் இந்த விரதம் ஆரம்பமாகும். முருக பக்தர்கள் ஓர் கடும் தவமாகவே இவ் விரதத்தை கருதி ஆறு நாட்களும் உணவு தவிர்த்து முழுப்பட்டினியாக உபவாசமிருத்தல் வழக்கம். முதல் நாள் அமாவாசை அன்றே ஒரு நேர உணவு உண்டு விரதமாகவிருந்து மறு நாளை உபவாசத்திற்கு தயார் செய்து கொள்வர். பொதுவாகவே உபவாச விரதம் அனுஷ்டிக்கும் போது முதல் நாளும் மறுநாளும் ஒரு நேர உணவே உட்கொள்ள வேண்டும்.

பிரதமையன்று அதிகாலை நீராடித் தூய ஆடை அணிந்து நித்திய அனுஷ்டானங்கள் முடித்து முருகப்பெருமானின் ஆலயம் சென்று ஆறு நாட்களும் அன்ன ஆகாரங்கள் எதுவுமின்றி இறைவழிபாடு , முருகநாம பஜனை, நாமஜபம், புராணபடனம், புராணம்கேட்டல் போன்ற புனித காரியங்களுடன் அங்கேயே தங்கியிருப்பர். தண்ணீர் கூட அருந்தாது ஆலயத்தில் வழங்கப்படும் தீர்த்தம் மட்டும் அருந்தி விரதமிருத்தல் உத்தமோத்தமமான விரதமாகும். தீர்த்தம் என்பது இளநீர், தேசிக்காய், சர்க்கரை, பால் போன்றவை கலந்து தயாரிக்கப்படுவது. இது பட்டினியாக இருக்கும் வயிற்றினுள் வெளிப்படும் அதிக சக்திமிக்க வெப்பம் , வாய்வு , பித்தம் இவற்றை தணித்து உடற்சமநிலையை பேணுவதற்கும் பசி தாகம், என்பனவற்றை ஓரளவு தணிக்கவும் உதவுகிறது என்பர். ஆலயங்களில் ஆரம்பத்திலேயே முதலாம் நாள் பகலிலேயே தர்பை அணிந்து சங்கற்பித்து 6 நாட்களும் விரமிருத்தல் முறையாகும். 7ம் நாளான பாரணை தினத்தில் அதிகாலையில் நீராடி நித்திய கர்மானுஷ்டானங்களை நிறைவேற்றி பாரணைப் பூசை எனும் விசேட பூசையைக் கண்டு தரிசித்து ஆலய அர்ச்சகரிடம் 1ம் நாள் பெற்றுக்கொண்ட தர்ப்பையை தாம்பூலத்தில் வைத்து தட்சணையுடன் வழங்கி மகேஸ்வர பூசை செய்து அடியார்கட்கு அன்னமிட்டு பாரணை செய்யவேண்டும்.

இவ்வாறு கடும் விரதம் அனுஷ்டிக்க முடியாதவர்கள் முதல் ஐந்து நாட்களும் ஒரு பொழுது பால் அல்லது பழம் அல்லது உணவு உண்டு இறுதி நாள் உபவாசமிருக்கலாம். ஆறாம் நாள் சஷ்டித் திதியில் சூரசங்காரம் முடிந்த பின் அன்று முருகப்பெருமானுக்கு நடைபெறும் விஷேட அபிசேகம் அலங்கார பூசையினை தரிசித்து நித்திரை நீங்கி முருகப்பெருமானது சிந்தனையிலேயே மூழ்கி வழிபட்டு இருக்குமாறு நூல்கள் கூறுகின்றது. இதனையே தனித்திரு , விழித்திரு , பசித்திரு என கூறுவார்கள்.

சிவபெருமானுக்குரிய சிவராத்திரியும் , மகாவிஷ்ணுக்குரிய வைகுண்ட ஏகாதசியும் போல முருகப்பெருமானுக்குரிய ஸ்கந்தசஷ்டியும் மிக விசேஷமான தினமாதலால் துயில் நீத்தல் பொருத்தமானது. ஆயினும் அனேகமானவர்கள் இதை கைக்கொள்வதில்லை. இயன்றவர்கள் கைக்கொள்க.

இவ் விரதம் ஆறு வருடங்கள் தொடர்ந்து கைக்கொள்ளப்படல் வேண்டும். உபவாசம், அல்லது ஒரு நேர உணவு என்பது ஆறு வருடங்களுக்கும் ஒரே மாதிரியாக இருக்கவேண்டும். முறைப்படி சங்கல்ப பூர்வமாக ஆரம்பித்து ஆறாவது வருடத்தில் விரத முடிவில் விரதோத்யாபனம் செய்து விரதத்தை பூர்த்தி செய்து கொள்ளல் வேண்டும்.

விரதோத்யாபனத்தின் போது முருகன் ஆலயம் சென்று விரத பூர்த்தி சமயத்தில் விரதத்திற்குரிய பலன்கள் எனக்கு சித்திக்க வேண்டும் என்பதற்காக இந்த விசேஷ பூசையை செய்கின்றேன் என்று சங்கற்பித்து ( விரதோத்யாபன காலே யதோத்த பல சித்தியர்த்தம் விசேஷ பூஜனம், ஆசாரிய முகேன அகம், அத்ய க்ரிஷ்யே ) விசேஷ அபிசேகம், பூசை, சண்முக அர்ச்சனை அல்லது சகஸ்ரநாம அர்ச்சனை முதலியவற்றை செய்வித்து பெற்றுக்கொண்ட தற்பையுடன் தாம்பூல தட்சணை, வேட்டி, சால்வை, அரிசி, காய்கறி முதலியவற்றை அர்ச்சகரிடம் தானமாக சமர்ப்பித்து மகிழ்ச்சியுடன் இந்த தானத்தை வழங்குகின்றேன், சாத்திரங்களில் சொல்லியிருப்பது போல இந்த விரத பலன்கள் எனக்கு உண்டாகட்டும் என்று பிரார்த்திக்க வேண்டும். இதனையே சமஸ்கிருத சுலோகத்தில் " ப்ரதிமாம் வஸ்த்ர சம்யுக்தாம் , துப்யம் தாஸ்யாமி விப்ரேறத்ர யதோக்த பலதோ பவ " என்று கூறப்பட்டுள்ளது. ஸ்கந்த சஷ்டி விரதமகிமை பற்றி கந்தப்புராணம் சிறப்பாகப் புகழ்ந்து பேசும். வசிட்டமாமுனிவர் முகுந்த சக்கரவர்த்திக்கு உபதேசித்த பெருமையுடையது. அரசர்கள், தேவர்கள், முனிவர்கள் என பலரும் இந்த விரதத்தை அனுஷ்டித்துப் பேறு பெற்றனர்.

இவ்விரதம் தொடர்பான புராணக் கதையை சிறிது சிந்திக்கலாம். சூரன், சிங்கன், தாரகன் முதலிய அசுரர்கள் நெடுங்காலம் தேவர்கள், மனிதர்கள் முதலிய யாவரையும் துன்புறுத்தி வதம் செய்து வந்தனர். இதனால் தேவர்கள் பரம்பொருளாம் சிவபெருமானிடம் முறையிட பரமசிவன் இதற்கோர் முடிவு காணும் நோக்கில் தமது சக்தியையே முருகப்பெருமானாகப் பிறப்பித்தார். அதாவது ஈசானம், தற்புருடம், அகோரம், வாமதேயம், சத்யோசாதம் ஆகிய ஐந்து திருமுகங்களோடு அதோமுகமாகிய ஆறாவது திருமுகத்தையும் கொண்டு முருகப்பெருமானாக எழுந்தருளச் செய்தார். அந்த முருகப்பெருமான் இந்த சூர பதுமாதி அசுரர்களுடன் ஆறு நாட்கள் போரிட்டு வென்றார். இந்த அருட்பெருங்கருணைச் செயலை வியந்து இப்போர் நிகழ்ந்த காலமாகிய ஐப்பசிமாத வளர்பிறை முதலாறு நாட்களையும் விரத நாட்களாகக் கொண்டு முனிவர்களும், தேவர்களும் நோற்று வந்தனர். இதுவே ஸ்கந்த சஷ்டி என்ற பெயரில் பூலோக மாந்தருக்கும் அனுஷ்டிக்க கிடைத்தது.

**" வெற்பொடும் அவுணன் தன்னை வீட்டிய தணிவேற் செங்கை அற்புதன் தன்னைப் போற்றி அமரரும் முனிவர் யாரும் சொற்படு துலையின் திங்கட் சுக்கில பக்கன் தன்னில் முற்பக லாதியாக மூவிரு வைகல் நோற்றார். "**

**-கந்தபுராணம் - கந்த விரதப்படலம் -**

இக் கந்த புராணக் கதையை “ சங்கரன் பிள்ளை சடியிலே மா வறுத்தார். ” எனும் வாக்கியம் மூலம் தெளிவின்மையாகக் கூறுவார்கள். அதாவது சங்கரன் புதல்வராகிய முருகப்பெருமான் சஷ்டித் திதியிலே மாமரமாக வந்த சூரனைக் கடிந்தார் என்பது இதன் உட்பொருளாகும். ஆறுநாட்போரும் ஆறு பகைகளை வெல்லுவதைக் குறிக்கும். சூரன், சிங்கன், தாரகன் மூவரும் ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங்களையும் பதி, பசு பாசம் ஆகியன தேவர்களையும், ஆன்மாக்களையும், முருகப்பெருமானான பரம்பொருளையும் உணர்த்தி நிற்பதால் முப்பொருளுண்மை விளக்குதலே கந்த புராணத்தின் நோக்கமெனலாம். ஆன்மாக்களாகிய நாம் எம்மை துன்பத்துள் ஆழ்த்தி நிற்கும் காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாற்சரியம் ஆகிய ஆறு பகைகளையும் ஆணபாதி மும்மலங்களையும் வென்று ஆண்டவனைச் சென்றடைய வேண்டும் என்ற கருத்தையே ஸ்கந்த சஷ்டி விரதமும் , கந்தப்புராணமும் வலியுறுத்துகின்றன.

**ஆரண முனிவர் வானோர் அங்கதன் மற்றை வைகல் சீரணி முருகவேட்குச் சிறப்பொடு புரிசை ஆற்றில் பாரணம் விதியிற் செய்தார் பயிற்றுமிவ் விரதந் தன்னால் தாரணி அவுணர் கொண்ட தம்பதத் தலைமை பெற்றார்.**

-கந்தபுராணம் - கந்த விரதப் படலம்.

## கந்தசஷ்டி கவசம்

### குறள் வெண்பா

துதிப்போர்க்கு வல்வினைபோம் துன்பம் போம்.
நெஞ்சில் பதிப்போர்க்குச் செல்வம் பலித்துக் கதித்து ஓங்கும்
நிஷ்டையும் கைகூடும்.
நிமலர் அருள் கந்தர் சஷ்டி கவசந் தனை.

### காப்பு

அமரர் இடர்தீர அமரம் புரிந்த
குமரன் அடி நெஞ்சே குறி.

### நூல்

சஷ்டியை நோக்க சரவணா பவனார்
சிஷ்டருக் குதவும்செங்கதிர் வேலோன்
பாதமிரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம் பாட கிண்கிணி ஆட
மையல் நடஞ்செய்யும் மயில்வாகனனார்

கையில் வேலால் எனைக் காக்கவென்று வந்து
வர வர வேலாயுதனார் வருக
வருக வருக மயிலோன் வருக
இந்திர முதலா எண்திசை போற்ற
மந்திர வடிவேல் வருக வருக

வாசவன் மருகா வருக வருக
நேசக் குறமகள் நினைவோன் வருக
ஆறுமுகம் படைத்த ஐயா வருக
நீறிடும் வேலவன் நித்தம் வருக
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக

சரஹணபவனார் சடுதியில் வருக
ரஹண பவச ரரரர ரரர
ரிஹண பவச ரிரிரிரி ரிரிரி
விணபவ சரஹண வீரா நமோ நம
நிபவ சரஹண நிறநிற நிறன

வசர ஹணப வருக வருக
அசுரர் குடிகெடுத்த ஐயா வருக
என்னை ஆளும் இளையோன் கையில்
பன்னிரண்டா யுதம் பாச அங்குசமும்
பரந்த விழிகள் பன்னிரண்டிலங்க

விரைந்தனைக் காக்க வேலோன்வருக
ஐயும் கிலியும் அடைவு டன்சௌவும்
உய்யொளி சௌவும் உயிர் ஐயும் கிலியும்
கிலியும் சௌவும் கிளரொளி ஐயும்
நிலைபெற் றென் முன் நித்தமும் ஒளிரும்

சண்முகம் நீயும் தனியொளி யொவ்வும்
குண்டலியாம் சிவ குகன்தினம் வருக
ஆறுமுகமும் அணிமுடி ஆறும்
நீறிடு நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச் செவ்வாயும்

நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈராறு செவியில் இலகு குண்டலமும்
ஆறிரு திண்புயத் தழகிய மார்பில்
பல் பூஷணமும் பதக்கமும் தரித்து
நன்மணி பூண்ட நவரத்தின மாலையும்

முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பழகுடைய திருவயிறு உந்தியும்
துவண்ட மருங்கில் சுடரொளி பட்டும்
நவரத்தினம் பதித்த நற்சீராவும்
இருதொடை அழகும் இணை முழந்தாளும்

திருவடி யதனில் சிலம்பொலி முழங்க
செககண செககண செகக ணசெககண
மொகமொக மொகமொக மொகமொக மொகென
நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகுடிகு டிகுகுண டிகுகண

ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடு டுடுடு டுடுடு டுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு
விந்து வித்து மயிலோன் விந்து

முந்து முந்து முருகவேள் முந்து
என்றனை யாளும் ஏரகச் செல்வ
மைந்தன் வேண்டும் வரமகிழ்ந்து தவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலா விநோதனென்று

உன்திரு வடியை உறுதி என்றெண்ணும்
என்தலை வைத்துன் இணையடி காக்க
என் உயிர்க் குயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியால் பாலனைக் காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்க

பொடிபுனை நெற்றியை புனிதவேல் காக்க
கதிர்வேல் இரண்டும் கண்ணினைக் காக்க
விதிசெவி இரண்டும் வேலவர் காக்க
நாசிகள் இரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தனைப பெருவேல் காக்க

முப்பத திருப்பல் முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க
கன்னமிரண்டும் கதிர்வேல் காக்க
என்னிளங் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை இரத்தின வடிவேல் காக்க

சேரிள முலைமார் திருவேல் காக்க
வடிவே லிருதோள் வளம்பெறக் காக்க
பிடரிகளிரண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழுபதினாறும் பருவேல் காக்க

வெற்றிவேல் வயிற்றை விளங்கவேல் காக்க
சிற்றிடை அழகுற செவ்வேல் காக்க
நாண் ஆம் கயிற்றை நல்வேல் காக்க
ஆண்பெண்குறிகளை அயில்வேல் காக்க
பிட்டமிரண்டும் பெருவேல் காக்க

வட்ட குதத்தை வல்வேல் காக்க
பணைத்தொடையிரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க
ஐவிரல் அடியிணை அருள்வேல் காக்க
கைக ளிரண்டும் கருணைவேல் காக்க

முன்கையிரண்டும் முரண்வேல் காக்க
பின்கையிரண்டும் பின்னவள் இருக்க
நாவில் ஸரஸ்வதி நற்றுணை ஆக
நாபிக் கமலம் நல்வேல் காக்க
முப்பால் நாடியை முனை வேல் காக்க

எப்பொழுதும் எனை எதில்வேல் காக்க
அடியேன் வசனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனக வேல் காக்க
வரும் பகல் தன்னில் வச்சிரவேல் காக்க
அரையிருள் தன்னில் அனையவேல் காக்க

ஏமத்தில் ஜாமத்தில் எதிர்வேல் காக்க
தாமதம் நீக்கி சதுர்வேல் காக்க
காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியில் நோக்க
தக்கத் தக்கத் தடையறத் தாக்க

பார்க்கப் பார்க்கப் பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகை அகல
வல்ல பு தம் வலாஷ்டிகப் பேய்களும்
அல்லற் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைகள் தின்னும் புழக்கடை முனியும்

கொள்ளிவாய்ப்பேய்களும் குரலைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரமராட்சதரும்
அடியனைக்கண்டால் அலறிக்கலங்கிட
இரிசிக் காட்டேரி இத்துன்ப சேனையும்
எல்லினும் இருட்டிலும் எதிர்படும் அண்ணரும்

கன புசைகொள்ளும் காளியோடனே வரும்
விட்டங் காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக்காரரும் சண்டாளர்களும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுந்தோடிட
ஆனை அடியினில் அரும்பாவைகளும்

பு னை மயிரும் பிள்ளைகள் என்பும்
நகமும் மயிறும் நீண்டமுடி மண்டையும்
பாவைகளுடனும் பலகலசத்துடன்
மனையிற் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டிய செருக்கும் ஒட்டிய பாவையும்

காசும் பணமும் காவுடன் சோறும்
ஓதும் அஞ்சனமும் ஒருவழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்த குலைத்திட
மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிட
கால தூதாள் எனைக் கண்டாற் கலங்கிட

அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட
வாய்விட்டலறி மதிகெட்டோட
படியினில் முட்ட பாசக் கையிற்றால்
கட்டுடன் அங்கம் கதறிட க்கட்டு
கட்டி உருட்டு கால்கை முறிய

கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு முழிகள் பிதுங்கிட
செக்கு செக்கு செதில் செதிலாக
சொக்கு சொக்குச் சூர்ப்பகைச் சொக்கு
குத்து குத்து கூர்வடிவேலால்

பற்று பற்று பகலவன் தணலெரி
தணலெரி தணலெரி தணலது வாக
விடு விடு வேலை வெருண்டது வோட
புலியும் நரியும் புன்னரி நாயும்
எலியும் கரடியும் இனிதொடர்ந் தோட

தேளும் பாம்பும் செய்யான் புரான்
கடிவிட விஷங்கள் கடித்துய ரங்கம்
ஏறிய விஷங்கள் எளிதினில் இறங்க
ஒளிப்புஞ் சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதம் சயித்தியம் வலிப்புப பித்தம்

சூலைசயங் குன்மம் சொக்குச்சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் பிருதி
பக்கப் பிளவை படர் தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத்து அரணை பருஅ ரை யாப்பும்

எல்லாப் பிணியும் எந்தனைக் கண்டால்
நில்லாதோட நீ எனக் கருள்வாய்
ஈரேழ் உலகமும் எனக்கு உறவாக
ஆணும் பெண்ணும் அனைவரும் எனக்கா
மண்ணா ளரசரும் மகிழ்ந்துற வாகவும்

உன்னைத் துதிக்க உன் திருநாமம்
சரஹண பவணே சையொளி பவனெ
திரிபுர பவனெ திகழொளி பவனெ
பரிபுர பவனெ பவம் ஒளி பவனெ
அரிதிரு மருகா அமரா பதியைக்

காத்துத் தேவர்கள் கடுஞ்சிறை விதித்தாய்
கந்தா குகனே கதிர்வேலவனே
கார்த்திகை மைந்தா  கடம்பா கடம்பனே
இடும்பனை ஏன்ற இனியவேல் முருகா
தணிகா சலனே சங்கரன் புதல்வா....

கதிகா மத்துறை கதிர்வேல் முருகா
பழனிப் பதிவாழ் பாலகுமாரா
ஆவினன்குடி வாழ் அழகிய வேலா
செந்தின்மா மலையுறும் செங்கல்வராயா
சமரா புரிவாழ் சண்முகத் தரசே...

காரார் குழலாள் கலைமகள் நன்றாய்
என்நா இருக்க யான் உனைப் பாட
எனைத்தொடர்ந் திருக்கும் எந்தை முருகனை
பாடினே ஆடினேன் பரவசமாக
ஆடினேன் நாடனேன் ஆவினன் பூதியை....

நேச முடன்யான் நெற்றியில் அணியப்
பாச வினைகள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே உன்னருளாக
அன்புட ன் இரஷி அன்னமுஞ் சொன்னமும்
மெத்த மெத்த தாக வேலா யுதனார்...

சித்திப்பெற் றடியேன் சிறப்புடன் வாழ்க
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குற மகளுடன்...

வாழ்க வாழ்க வாரணத்துவசம்
வாழ்க வாழ்க வறுமைகள் நீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை யடியேன் எத்தனை செய்தால்
பெற்றவன் நீ குரு பொறுப்பது உன் கடன் ...

பெற்றவள் குறமகள் பெற்றவளாமே
பிள்ளையென் றன்பாய் பிரியமளித்து
மைந்தனென் மீது மனமகிழ்ந்தளித்
தஞ்சமென் றடியார் தழைத்திட அருள்செய்
கந்தர் சஷ்டி கவசம் விரும்பிய....

பாலன் தேவ ராயன் பகர்ந்ததைக்
காலையில் மாலையில் கருத்துடன் நாளும்
ஆசாரத்துடன் அங்கந் துலக்கி
நேச முடன் ஒருநினைவது வாகி
கந்தர் சஷ்டக் கவசம் இதனைச்....

சிந்தை கலங்காது தியானிப்பவவர்கள்
ஒருநாள் முப்பத் தாறுருக் கொண்டு
ஓதியே செபித்து உகந்து நீறணிய
அஷ்டதி க்குள்ளோர் அடங்கலும் வசமாய்த்
திசைமன்ன ரெண்மர் செயலது அருளுவர்...

மாற்றல ரெல்லாம் வந்து வணங்குவர்
நவகோள் மகிழ்ந்து நன்மை யளித்திடும்
நவமத னெனவும் நல்லெழில் பெறுவர்
எந்தநாளுமீ ரெட்டா வாழ்வார்
கந்தர்கை வேலாம் கவசத்தடியை...

வழியாற் கான மெய்யாம் விளங்கும்
விழியாற் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லாதவரை பொடிபொடி யாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்துரு சங்கா ரத்தடி...

அறிந்தென் துள்ளம் அஷ்டலட் சிமிகளில்
வீரலட் சுமிக்கு விருந்துண வாகச்
சூரபத்மாவைத் துணித்தகை யதனால்
இருபபத் தேர்வர்க்கு உவந்தமு தளித்த
குருபரன் பழனிக் குன்றினி லிருக்கும்...

சின்னக் குழந்தை சேவடி போற்றும்
என்னை தடுத தாட்கொள்ள என்றன துள்ளம்
மேவிய வடிவுறும் வேலவ போற்றி
தேவர்கள் சேனாபதியே போற்றி
குறமகள் மனமகிழ் கோவே போற்றி....

திறமிகு திவ்விய தேகா போற்றி
இடும்பா யுதனே இடும்பா போற்றி
கடம்பா போற்றி கந்தா போற்றி
வெட்சி புனையும் வேளே போற்றி
உயர்கிரி கனக சபைக்கு ஓரரசே....

மயில்நடமிடுவாய் மலர் அடி சரணம்
சரணம் சரணம் சரஹண பவ ஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்...238

ஸ்ரீ கந்தர் சஷ்டி கவசம் முற்றிற்று

## திரு சுப்பிரமணியம் விருத்தம்

எத்தனை கவியது பாடியும் தேடியும்
இரங்காத வாறு மேது
ஏழைக்கிரங்குவது சரவணப் பெருமா
ளிருக்கிறதா ரென்று உரையும்
சித்தர் முதல் வாக்கியம் கூறியது பொய்யோ
சிவசுப்ர மண்ய ரநதா
தென்பொதிகை மாமுனிக்குபதேசம் அன்று நீ
செப்பியதும் யானறியகுவேன்

முத்தனே முதல்வனே முருகனே அடியேனே
முன்னின்று காக்க வாவா
முச்சுடர்க்குரிய திருநாதனே வேதனே
முப்புராதி அன்பர் குருவே
சப்தரிஷி மாதவா கீதவா
தமிழ்பாடும் வாக்கு முதலே
தரணிதனில் மயில்மீதில் விளையாடி வருகின்ற
சண்முகக் குமர குருவே.

(ஏழைக்கு இரங்கி அருளவல்ல)

திரு. அருணகிரியார் அருளிய
திரு. சுப்பிரமணியர் விருத்தம் நிறைவுற்றது.

# குமாரஸ்தவம்

1. ஓம் ஷண்முக பதயே நமோ நம ஹ

ஓம் - ஆறுமுகத் தலைவனுக்கு வணக்கம்

2. ஓம் ஷண்மத பதயே நமோ நம ஹ

ஓம் - ஆறு சமயங்களின் தலைவனுக்கு வணக்கம்

3. ஓம் ஷட்க்ரீவ பதயே நமோ நம ஹ

ஓம் - ஆறு திருக்கழுத்துக்களுடைய தலைவனுக்கு வணக்கம்

4. ஓம் ஷட்க்ரீட பதயே நமோ நம ஹ

ஓம் - ஆறு கிரீடங்களை அணிந்துள்ள தலைவனுக்கு வணக்கம்

5. ஓம் ஷட்கோண பதயே நமோ நம ஹ

ஓம் - அறுகோணச் சக்கரத்தில் எழுந்தருளியிருக்கும் தலைவனுக்கு வணக்கம்

6. ஓம் ஷட்கோஷ பதயே நமோ நம ஹ

ஓம் - ஆறு தோத்திர நூல்களின் தலைவனுக்கு வணக்கம்

7. ஓம் நவநிதி பதயே நமோ நம ஹ

ஓம் - ஒன்பது வகையான செல்வங்களின் தலைவனுக்கு வணக்கம்

8. ஓம் சுபநிதி பதயே நமோ நம ஹ

ஓம் - பேரின்பச் செல்வத்தின் (முக்தியின்பம்) தலைவனுக்கு வணக்கம்

9. ஓம் நரபதி பதயே நமோ நம ஹ

ஓம் - அரசர் தலைவனுக்கு வணக்கம்

10. ஓம் ஸூரபதி பதயே நமோ நம ஹ

ஓம் - தேவர்கள் தலைவனுக்கு வணக்கம்

11. ஓம் நடச்சிவ பதயே நமோ நம ஹ

ஓம் - நடனம் ஆடும் சிவனின் தலைவனுக்கு வணக்கம்

12. ஓம் ஷடக்ஷர பதயே நமோ நம ஹ

ஓம் - ஆறெழுத்துத் தலைவனுக்கு வணக்கம்

13. ஓம் கவிராஜ பதயே நமோ நம ஹ

ஓம் - கவியரசர் தலைவனுக்கு வணக்கம்

14. ஓம் தபராஜ பதயே நமோ நம ஹ

ஓம் - தவத்தினருக்கு அரசான தலைவனுக்கு வணக்கம்

15. ஓம் இகபர பதயே நமோ நம ஹ

ஓம் - இம்மை இன்பத்தையும் மறுமை இன்பத்தையும் அளிக்கும் தலைவனுக்கு வணக்கம்

16. ஓம் புகழ்முனி பதயே நமோ நம ஹ

ஓம் - திருப்புகழ் பாடிய முனிவராகிய அருணகிரிநாதரின் தலைவனுக்கு வணக்கம்

17. ஓம் ஜயஜய பதயே நமோ நம ஹ

ஓம் - மிகுந்த வெற்றியையுடைய தலைவனுக்கு வணக்கம்

18. ஓம் நயநய பதயே நமோ நம ஹ

ஓம் - மிக்க நன்மையும் இன்பமும் தரும் தலைவனுக்கு வணக்கம்

19. ஓம் மஞ்சுள பதயே நமோ நம ஹ

ஓம் - அழகுருவான தலைவனுக்கு வணக்கம்

20. ஓம் குஞ்சரீ பதயே நமோ நம ஹ

ஓம் - தேவகுஞ்சரி எனும் தெய்வயானை அம்மையின் தலைவனுக்கு வணக்கம்

21. ஓம் வல்லீ பதயே நமோ நம ஹ

ஓம் - வள்ளியம்மை தலைவனுக்கு வணக்கம்

22. ஓம் மல்ல பதயே நமோ நம ஹ

ஓம் - மற்போரில் வல்ல தலைவனுக்கு வணக்கம்

23. ஓம் அஸ்த்ர பதயே நமோ நம ஹ

ஓம் - கைவிடு படைகளின் தலைவனுக்கு வணக்கம்

24. ஓம் சஸ்த்ர பதயே நமோ நம ஹ

ஓம் - கைவிடாப் படைகளின் தலைவனுக்கு வணக்கம்

25. ஓம் ஷஷ்டி பதயே நமோ நம ஹ

ஓம் - சஷ்டி திதியில் அமைந்த கந்த விரத்தத் தலைவனுக்கு வணக்கம்

26. ஓம் இஷ்டி பதயே நமோ நம ஹ

ஓம் - வேள்வித் தலைவனுக்கு வணக்கம்

27. ஓம் அபேத பதயே நமோ நம ஹ

ஓம் - வேற்றுமையற்ற தலைவனுக்கு வணக்கம்

28. ஓம் ஸுபோத பதயே நமோ நம ஹ

ஓம் - மெய்ஞ்ஞானம் அருளும் தலைவனுக்கு வணக்கம்

29. ஓம் வியூஹ பதயே நமோ நம ஹ

ஓம் - சேனைகளின் படைவகுப்புத் தலைவனுக்கு வணக்கம்

30. ஓம் மயூர பதயே நமோ நம ஹ

ஓம் - மயூர நாதனுக்கு வணக்கம்

31. ஓம் பூத பதயே நமோ நம ஹ

ஓம் - பூத வீரர்களின் தலைவனுக்கு வணக்கம்

32. ஓம் வேத பதயே நமோ நம ஹ

ஓம் - வேதங்களின் தலைவனுக்கு வணக்கம்

33. ஓம் புராண பதயே நமோ நம ஹ

ஓம் - புராணங்களின் தலைவனுக்கு வணக்கம்

34. ஓம் ப்ராண பதயே நமோ நம ஹ

ஓம் - ஆன்மாவின் தலைவனுக்கு வணக்கம்

35. ஓம் பக்த பதயே நமோ நம ஹ

ஓம் - அடியார்களின் தலைவனுக்கு வணக்கம்

36. ஓம் முக்த பதயே நமோ நம ஹ

ஓம் - பாச பந்தங்களினின்றும் விடுபட்டவர்களுடைய தலைவனுக்கு வணக்கம்

37. ஓம் அகார பதயே நமோ நம ஹ

ஓம் - அகாரம் எனும் வியட்டிப் பிரணவமாய் விளங்கும் தலைவனுக்கு வணக்கம்

38. ஓம் உகார பதயே நமோ நம ஹ

ஓம் - உகாரம் எனும் வியட்டிப் பிரணவமாய் விளங்கும் தலைவனுக்கு வணக்கம்

39. ஓம் மகார பதயே நமோ நம ஹ

ஓம் - மகாரம் எனும் வியட்டிப் பிரணவமாய் விளங்கும் தலைவனுக்கு வணக்கம்

40. ஓம் விகாச பதயே நமோ நம ஹ

ஓம் எங்கும் நிறைந்துள்ள இறைவனுக்கு வணக்கம்

41. ஓம் ஆதி பதயே நமோ நம ஹ

ஓம் - எல்லாவற்றிற்கும் முதற்காரணமாகிய தலைவனுக்கு வணக்கம்

42. ஓம் பூதி பதயே நமோ நம ஹ

ஓம் - சகல ஐசுவரியங்களின் தலைவனுக்கு வணக்கம்

43. ஓம் அமார பதயே நமோ நம ஹ

ஓம் - மாரனை எரித்த தலைவனுக்கு வணக்கம்

44. ஓம் குமார பதயே நமோ நம ஹ.

ஓம் - குமாரனாகிய பிரானுக்கு வணக்கம்.

... ஸ்ரீ குமாரஸ்த்தவம் முற்றிற்று.

SRI MURUGAN HINDU ASSOCIATION
Regd No: HA/4/BT/186
ARAYAMPATHI.